Cheats in securing seats in Medical Colleges

* 110 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. Chief Minister be pleased to state—

(*a*) whether any special drive was launched by the Police to book cheats indulging in securing seats in Medical Colleges in this State this year; and

(*b*) if so, the number of them so booked?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

(இ) இருவர்மீது வழக்கு புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது.

THIRU T. MARTIN: May I request the Hon. Chief Minister to state when this case was booked, when the charge-sheet was filed and why there has been such a long delay in investigating this case?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : புலன் விசாரணை நடைபெற்று வருகிறது என்று மாத்திரம்தான் என்னுல் சொல்ல முடியும். தாமதத்திற்கான காரணங்களை இனிமேல்தான் ஆராய வேண்டும்.

திரு. கே. போஜன்: தலைவர் அவர்களே, இம்மாதிரி கல்லூரியொன்றில் இடம் வாங்கித் தருவதாகச் சொல்லியது குறித்து முன்னுள் அமைச்சர் ஒருவர் கைது செய்யும்படியாக இருந்ததே,. அதனுடைய நிலைமை என்ன ? அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தக் கேள்வியுனுடைய அடிப்படையே அதுதான். அதைத்தான் திரு மார்டின் அவர்கள் தொடர்ந்து கேட்டார்கள். அதற்கான பதில் சொல்லியிருக்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : அந்த இரண்டு பேர்கள் யார் யார் ? என்ன குற்றம் செய்தார்கள் என்பதற்காகவேண்டி இந்தத் தாவாவில் நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது ஏற்கனவே பத்திரிகையில் செய்தியாக வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் படித்திருப்பார்கள் என்று நம்புகிறேன்.

திரு. ரா. ராமச்சந்திர துரை : தலைவர் அவர்களே, அரசியலிலே முக்கியப் பதவிகளில் இருப்பவர்கள் வைத்தியக் கல்லூரியில் இடம் வாங்கித் தருவதாகப் பணம் வாங்கி, இடம் வாங்கித் தராமல், பணத்தையும் திருப்பித் தராமல் இருப்பதைப்பற்றி அரசாங்கத்திற்குத் தகவல் வந்ததா ? தகுந்த ஆதாரத்துடன் அவர்களைப்பற்றி இங்கு எடுத்துக் கூறினுல் அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தகுந்த ஆதாரங்களுடன் எடுத்துக் கூறினுல் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

Name boards in public Offices and Schools in Hosur taluk

* 111 Q.—Thiru B. VENKATASWAMY: Will the Hon. Chief Minister be pleased to state :—

(*a*) whether there is any proposals to introduce Telugu and Kannada name boards in addition to Tamil in public offices and schools in Hosur taluk in view of the recognized minorities in our State; and

(*b*) if so, when it will be implemented?